## ஹல்தும்முள்ள பிரதேச சபை

## பதுளை மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மே 07 ஆந்த திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்டம்பர் 06 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஹல்தும்முள்ள பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டின் போது சபைக்கு நன்கொடை ஒன்றாக வழங்கியிருந்த நீர் பவுசரின் பெறுமதியாகிய ரூபா 4,684,253 தொகை மற்றும் பெக்கோ லோடரின் பெறுமதி ரூபா 954,179 தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுகள் தொடர்பாக மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிக் கணக்கில் மேற்கொள்ளப்பட்டிருந்த பிழையற்றதல்லாத சீராக்கல்களின் காரணமாக ரூபா 3,515,000 தொகையினால் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் மோட்டார் வாகனக் கணக்கின் பெறுமதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான இரண்டு சேமிப்புக் கணக்குகள் தொடர்பான கூட்டுத்தொகை ரூபா 880,526 தொகை பெறுமதியான சேமிப்பு பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 ஆண்டு தொடர்பாக ரூபா 265,875 இற்கான நிலுவை நீதி மன்றத் தண்டப் பணம் சரியான முறையில் கணக்கீடு செய்யப்பட்டிருக்காமையால் இரட்டைப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் 11 நிர்மாண வேலைகள் தொடர்பான நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 942,943 தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் 4 நிர்மாண வேலைகள் தொடர்பாக நிர்மாண வேலைக் கடன்பட்டோர் பெறுமதி ரூபா 126,611 தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(எ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவைக் கடன் தவணைப் பணத்தில் அடங்கியிருந்த ரூபா 108,433 தொகை பெறுமதியான வட்டிச் செலவினை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 287,154 தொகை பெறுமதியான காகிதாதிகள் மற்றும் நீர்வேலைப் பண்டங்களின் ஆரம்ப இருப்பு நிதிக் கூற்றுக்களின் செலவு ஒன்றெனச் சீராக்கல் செய்திருக்கவில்லை.

(ஐ) முன்னைய ஆண்டின் போது சபைக்கு வழங்கியிருந்த 280 கல்வணய்ஸ் கொடிக் கம்பங்களின் பெறுமதியாகிய ரூபா 276,785 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது பிழையற்ற மீதியினை உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்படாமல் ஏனைய நிலுவை வருமானக் கணக்கிற்கு ரூபா 2,050,181 தொகையொன்று செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) முன்னைய ஆண்டு தொடர்பாக ரூபா 1,024,491 இற்கான முத்திரைக் கட்டண வருமானம் மீளாய்வாண்டின் போது பிழையான முறையில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் நடைமுறை சொத்துக்கள் மற்றும் திரண்ட நிதியம் அதே பெறுமதியால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 16,331,449 தொகையான 04 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்த மீதிகளிடையே காணப்படக் கூடியதாகவிருந்த வித்தியாசங்களின் கூட்டுத்தொகை ரூபா 2,410,396 தொகை அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

----------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்வாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 14,068,253 ஆகக் காணப்பட்டதுடன் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 11,671,283 ஆக இருந்தது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

ரூபா 108,602,998 தொகை பெறுமதியான 07 கணக்கு விடயங்கள், தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

--------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 217 | சபைக்குச் சொந்தமான மற்றும் சபையினால் பயன்படுத்தப்படும் அனைத்துச் கட்டிடங்கள் மற்றும் காணிகள் தொடர்பாக பீ.எஸ்.46 படிவத்தின் பிரகாரம் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நி.பி. 880, 2005 மார்ச் 24 ஆந் திகதிய ஊவா மாகாண பிரதான செயலாளரின் 2/மு/1 ஆம் இலக்க கடிதம் மற்றும் 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 180 | சபையில் கடமையாற்றும் பிணை வைப்புச் செய்ய வேண்டிய 09 உத்தியோகத்தர்கள் பிணை வைப்புச் செய்திருக்கவில்லை |
| (ii) நி.பி. 371 | மீளாய்வாண்டின் போது பல்வேறு தரப்பினருக்கு 16 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 275,611 இற்கான முற்பணங்களை தீர்த்திருக்கவில்லை. |
| (இ) அரச தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் 4 ஆம் பிரிவு | சபையில் கடமையாற்றிய சேவையை விட்டுச் சென்றுள்ள ஊழியர் ஒருவரிடம் 2005 ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 26,920 தொகையான கடன் மீதியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்க்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,679,636 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,706,937 ஆக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

-----------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முன்னைய ஆண்டுகள் தொடர்பாக பிரதேச சபை நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 1,045,417 தொகையாகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்டிருந்த வருமானத்தில் 61% (ரூபா 3,056,271) தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் ஏக்கர் வரி செலுத்துவதற்காக பதிவு செய்யப்பட்டிருந்த 81 நபர்களிடமிருந்து 2015 ஆண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 87,172 நிலுவை ஏக்கர் வரி என இனங்கண்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமான 16 கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய 10 வருட காலம் தொடர்பான பழமைவாய்ந்த நிலுவை கடை வாடகை ரூபா 530,672 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஈ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டம் மற்றும் 1523/16 ஆம் இலக்கம் கொண்ட 2008 ஜனவரி 25 திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த சபையின் அதிகாரப் பிரதேசத்தில் செயற்படும் 02 தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் 09 அரைக்கும் ஆலைகளுக்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்கியிருக்கவில்லை.

2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 1,005,935 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,750,800 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

------------------------------------------------------

சபையினால் அலுவலக உபகரணங்களுக்கு கூறுவிலைகள் பெறப்பட்டு அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யும் போது குறைந்த விலை என ரூபா 226,950 தொகையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 270,180 விலைக்கு கொள்வனவு செய்திருந்தமையால் ரூபா 43,230 தொகை மிகையாக சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

3.2 ஒப்பந்த நிருவாகம்

--------------------------------

(அ) சபையினால் 2015 ஆண்டின் போது உடன்படிக்கைகளில் கையொப்பமிடப்பட்ட 03 நிர்மாண வேலைகளின் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்த போதிலும், வேலைகள் ஆரம்பிப்பதற்கான எதுவித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படாத போது வழங்கியிருந்த ரூபா 410,000 தொகையான முற்பணத்தினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2010 ஆண்டின் போது சபையினால் கொஸ்லந்த வர்த்தகக் கடைத்தொகுதியை நிர்மாணிப்பதற்காக உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து 12% வருடாந்த வட்டி மீது ரூபா 5,000,000 தொகை மற்றும் சபை நிதியத்தில் இருந்து ரூபா 1,591,337 ஆக ரூபா 6,591,357 மொத்தமாகச் செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்தக் கடைத்தொகுதிக்கு நுழைபாதை ஒன்று காணப்படாமையால் 10 கடைகளை வாடகைக்கு கொடுப்பதற்கு முடியாத நிலையில் காணப்பட்டது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

மீளாய்வாண்டின் போது பாதீடு வருமானம் மற்றும் செலவுக் கட்டுப்பாட்டில் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

-------------------------------------------------

மீளாய்வாண்டின் போது வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 உள்ளகக் கணக்காய்வு

-----------------------------------

மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

-------------------------------------------------------------------------------------

2015 ஜூலை 02 ஆந் திகதிய சபைக்குச் சாட்டப்பட்டிருந்த பெக்கோ லோடர் இயந்திரம், 2004 ஆண்டின் போது கிடைத்திருந்த ஜோன் டியர் டிரக்டர் வண்டியுடனான கலப்பை மற்றும் 252-6369 இலக்கம் கொண்ட கப் வண்டி எதுவித பொருளாதார நலன்களையும் உழைப்பதற்காக பயன்படுத்தப்படாமல் சபை வளவில் மற்றும் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு

(இ) ஒப்பந்த நிருவாகம்

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்